1974 மார்ச் 26]

இணைப்பு I:

139-ம் பக்கத்தில் 615 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

விடை. :—

(அ) தமிழ்நாட்டில் தற்போது 15 உயர் விளைச்சல் ரகங்களும், 4 இதர உயர் விளைச்சல் ரகங்களும், 5 பொறுக்கு வித்து ரகங்களும், ஆக 24 ரகங்கள் பெரும் அளவில் பயிரிடப் படுகின்றன. இதை தவிர்த்து உள்ளூர் ரகங்களும் பயிரிடப்படு கின்றன.

உயர் விளைச்சல் ரகங்களாவன :—

ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, கருணை, காஞ்சி, அன்னபூர்ணா, பொன்னி, கண்ணகி, கரிகாலன், ஜயா, காவேரி, பவானி, ரத்னா, திரிவேணி, பாலா, பாமா ஆகிய 15 ரகங்கள்.

இதர உயர் விளைச்சல் ரகங்கள் :—

ஆடுதுறை 27, கோ. 29, கோ. 25, அம்பாசமுத்திரம் 14 ஆகிய நான்கு ரகங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இவ்வினாவிற்கான விடை கீழ்க்கண்ட அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.—

வரிசை எண்.	நெல் இனுசின் பெயர்.	வருடம் முழுவதும்.	சொர்ணவாரி அல்லது கார் அல்லது குறுவை.	சம்பா.	தாளடி அல்லது பிஷாணம்.	கோடை அல்லது நவரை.
1	2	3	4	5	6	7
1	ஐ.ஆர். 20	வருட முழுவதும்.				
2	ஐ.ஆர். 8	....				
3	கருணா	....	சொர்ணவாரி, கார், குறுவை.			
4	பொன்னி	....	....	சம்பா.	தாளடி பிஷாணம்.	
5	கண்ணகி	....	சொர்ணவாரி, கார், குறுவை.			
6	கரிகாலன்	....	சொர்ணவாரி, கார், குறுவை.			
7	ஜயா	....	....			
8	காஞ்சி	....	சொர்ணவாரி, கார். குறுவை.	.....	.....	
9	அன்னபூர்ணா	....	சொர்ணவாரி, கார், குறுவை.	.....	.....	கோடை நவரை.
10	காவேரி	....	சொர்ணவாரி, கார், குறுவை.	.....	.....	
11	பவானி	....	,,	சம்பா	....	
12	ரத்னா	....	,,	....	....	
13	திரிவேணி	....				

14 பாலா	வருட முழுவதும்		....	....	,,
15 பத்மா	....	,,			
இதர உயர்விளைச்சல் ரகங்கள்:—					
1 ஆடுதுறை 27	....	சொர்ணவாரி, கார், குறுவை.	....	....	கோடை நவரை.
2 கோ 29	....	,,	சம்பா.	தாளடி. பிஷாணம்.	,,
3 கோ 25	....	....	,,	,,	....
4 அம்பாசமுத்திரம் 14		கார், குறுவை.	....	....	....
பொறுக்கு வித்து நெல் ரகங்கள்:—					
1 ஜி.இ.பி. 24	....	....	சம்பா.	....	....
2 டி.கே.எம். 6	....	சொர்ணவாரி, கார் குறுவை.	....	....	கோடை நவரை.
3 எ.எஸ்.டி. 1	....	கார்.	....	....	....
4 பி.வி.ஆர். 1	....	....	சம்பா.	....	....
5 பி.சி.வி. 1	....	....	,,	....	....

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1974 மார்ச் 26

ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, ஜயா, பாலா ஆகிய நெல் ரகங்கள் வருட முழுவதும் பயிரிடலாம். கருணை, கண்ணகி, கரிகாலன், காஞ்சி, அன்னபூர்ணா, காவேரி, பவானி, ரத்னா, திரிவேணி, பத்மா, ஆடுதுறை 27, கோ 29, எ.எஸ்.டி. 14 (கார்) டி. கே. எம். 6, ஏ. எஸ். டி. 1 (கார்) ஆகிய நெல் ரகங்கள் சொர்ணவாரி அல்லது கார் அல்லது குறுவை பட்டத்தில் பயிரிடலாம்.

பொன்னி, பவானி, கோ 25, ஜி. இ. பி. 24, பி. வி. ஆர். 1, பி. சி. பி. 1 ஆகிய நெல் ரகங்கள் சம்பா பட்டத்தில் பயிரிடலாம்.

பொன்னி, கோ 25, நெல் ரகங்கள் தாளடி அல்லது பிஷாணம் பருவத்திலும் பயிரிடலாம்.

கோடை அல்லது நவரை பட்டத்தில் காஞ்சி, அன்னபூர்ணா, காவேரி, பவானி, ஆடுதுறை 27, கோ 29, டி.கே.எம். 6, நெல் ரகங்கள் பயிரிடலாம்.

(ஊ) ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, ஜயா, பாலா, காஞ்சி, அன்னபூர்ணா, காவேரி ஆகிய உயர் ரகங்களும்,

ஆடுதுறை 27, கோ 29 ஆகிய இதர உயர் விளைச்சல் ரகங்களும்,

டி.கே.எம். 6 பொறுக்கு வித்து ரகமும் ஆகிய 10 ரகங்களும் மற்றும் சில உள்ளூர் ரகங்களும் கோடையில் பயிரிடப்படுகின்றன.

இணைப்பு II

144-ம் பக்கத்தில் 619 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

விடை—

அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது நடந்தேறி வரும் ஆராய்ச்சிப் பணியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

விரைவில் வளரும் கலப்பின பயிர்கள் குறித்து ஆய்வு செய்வதன் மூலமும், A.S.D. 1, 2, 3 வகைகளுடன் தொடக்க சோதனை நடத்துவதன் மூலமும், மேற்கண்ட வகைகளின் விளைச்சலை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமும் கார் காலத்தில் பயிரிடப்படும் தற்போதைய A.S.D. வகை பயிருக்குப் பதிலாக குட்டையான, கனத்த தாளுடைய உரங்களிடுவதால் பயனடையும் மிகு பயன்தரும் வகைப் பயிர்களை உருவாக்குதல்.